விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 052 வள்ளுவர் ஆண்டு 2055 தை 26 வெள்ளிக்கிழமை (09.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# இறுதி யுத்தத்தில் சரணடைந்த விடுதலைப் புலிகள் எங்கே?

## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு இராணுவத்துக்கு உத்தரவு

(கொழும்பு)

இறுதி யுத்த காலத்தில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்தமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்கு முன்னிலையாகுமாறு இலங்கை இராணுவத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முதியோர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்திருந்தார்.

இதன்படி 5,000 ரூபாயாக இருந்த 15

## ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு காலதாமதம்

(கொழும்பு)

7 லட்சத்துக்கும் மேற்பட்ட அரச ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக ஓய்வூதியர்கள் தெரிவித்துள்ளனர்.

சில அரச ஊழி 15

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக 30 மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு இதுவரை 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு 15

## வடக்கின் அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்பை வழங்கத் தயார்

### யாழில் நெதர்லாந்து துணைத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான பங்களிப்பை செய்ய தயார் என நெதர்லாந்து துணைத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், 15

## அரசியலமைப்பு மீறல்களுக்கு சபாநாயகரும் துணை போயுள்ளார்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களைப் புறக்கணித்தே நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசியலமைப்பு மீறல் செயற்பாட்டுக்குச் சபாநாயகர் துணை போயுள்ளார். சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நீதியமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். 16

## பொதுப் போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தல்

### ஒரே நாளில் 18 பேர் கைது

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்துக்களில் பாலியல் சீண்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 பேர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுப்போக்குவரத்துகளில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்ந்து கொண்டு இருக்கி 15

## மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுகின்றன

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரு 15

## சாந்தனுக்கு கடவுச்சீட்டு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

சாந்தனை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக, அவருக்குரிய கடவுச்சீட்டு தேவைப்பட்ட நிலையில், இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களின் அமைவாக 15

## தமிழ்த் தேசிய பிரச்சினையே பொருளாதார நெருக்கடியின் அடிப்படை - சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

தமிழ்த் தேசிய பிரச்சினையே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படைக் காரணியாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லங்கா மஹறால்(PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1760/=
ஜேர்மனி - 1680/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1980/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18945)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union WU | MoneyGram | Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
**077 8393 974**


# போதை கடத்தியவருக்கு ஆயுள் தண்டனை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

06 கிராம் ஹெரோயின்போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.


கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

2018 ஆம் ஆண்டில், கிராண்ட்பாஸ், கெத்தாராம பகுதியில் நடத்திய சோதனையின் போது 5.9 கிராம் ஹெரோயினுடன் இந்த குற்றவாளியை பொலிஸார் கைது செய்தனர்.

அதனைதொடர்ந்து, சட்டமா அதிபர் சந்தேகநபருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு, தீர்ப்பை அறிவித்த நீதிபதி, இந்த குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அரசுத் தரப்பு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

# தென்னிந்திய நடிகர்கள் கலைஞர்கள் யாழில்



பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்வை முன்னிட்டு தென்னிந்திய நடிகர்கள், கலைஞர்கள், யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

குறித்த குழு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த போது கலை கலாசார நிகழ்வுகளுடன் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று 9 ஆம் திகதி ஹரிகரனின் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

குறித்த இசைநிகழ்ச்சியை முன்னிட்டு தென்னிந்திய நடிகை ரம்பா மற்றும் பிரபல தென்னிந்திய நடன இயக்குனர் கலா மாஸ்டர் உள்ளிட்ட ஏற்பாட்டுகுழு இருநாட்களுக்கு முன் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இதையடுத்து பாடகர் ஹரிஹரன்உள்ளிட்ட இசைக்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இதேவேளை இசை நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட பிரபலங்களான நடிகர் சிவா, பாலா, சாண்டி மாஸ்டர், சஞ்சீவ் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், திவ்ய தர்சினி, ஆல்யமானசா , நந்தினி, மகாலட்சுமிஉள்ளிட்ட பலகலைஞர்கள் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். (ம-7)


**இதோ வடமராட்சியில்....**

A/L எடுத்த மாணவர்கள் தமக்குரிய பட்டப்படிப்புக்களையும் மேற்படிப்புக்களையும் இலகுவாக மேற்கொள்வதற்கு ஏற்ற வகையிலான

**Special English Classes**

ஆரம்பம் 10.02.2024 (பி.ப 3 மணிக்கு)

பிரபல ஆசிரியர் : **Mr.B.Jothy**
PG Dip.in.Teaching English (Second Upper),
B.Com(Hons), PGDE, M.Ed, M.A.in.Pub.Adm(Merit)

**OXFORD ENGLISH ACADEMY**

P.K.Lane (C-8310) Point pedro


# வவுனியாவில் பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

வவுனியா, கந்தபுரம் பகுதி யில் மோட்டர் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென் றுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

வவுனியா, கந்தபுரம் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் வீதியில் சென்ற போது பின் தொடர்ந்து மோட்டர் சைக்கிளில் சென்ற இருவர், குறித்த பெண்ணிடம் வேறு ஒரு வரின் முகவரி விசா ரிப்பது போன்று கதைத்துவிட்டுஅவர்அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)


யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
T.P : 077 711 0383

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

கேக் ஐசிங், கேக் மற்றும் உணவு தயாரித்தல், Hair Dressing Facials, Pedi cure, Mani cure, மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும் முறைகள் (Beautician பயிற்சி) (C-8304)

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.02.2024 புதன் காலை 10.00
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 18.02.2024 ஞாயிறு காலை 10.00



University of Jaffna

Centre for Open and Distance Learning | Department of Computer Science

**கணினிப் புலத்தில் கற்கை நெறிகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம், கணினி விஞ்ஞானத் துறையால் வழங்கப்படும் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

**Building Blocks of Internet of Things**
- 10 Satudays (9:00 - 12:00)
- Course Fee LKR 15,000.00

**Python for Problem Solving**
- 10 Satudays (13:00 - 16:00)
- Course Fee LKR 10,000.00

**Responsive Web Development**
- 10 Sundays (9:00 - 12:00)
- Course Fee LKR 10,000.00

**Advanced Web Development**
- 10 Sundays (13:00 - 16:00)
- Course Fee LKR 10,000.00

- கணினிப் புலத்தில் தமது அறிவை மேம்படுத்த ஆர்வமுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மற்றும் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், இருமொழிமூல வகுப்புக்கள், நேரடிச் செயன்முறை அமர்வுகள் மூலம் நடைபெறும்.
- தருக்க மற்றும் கணிதப் புதிர்களை உள்ளடக்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிகளுக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

| விண்ணப்ப முடிவுத்திகதி | தெரிவுப் பரீட்சை | கற்கைநெறிகள் ஆரம்பம் |
|---|---|---|
| 19/02/2024 | 24/02/2024 | 09/03/2024 |

விண்ணப்பங்கள், "www.csc.jfn.ac.lk/expr/application-process" எனும் இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினூடாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, விண்ணப்பக் கட்டணம் ரூ. 500.00 க்கான வங்கிப்பற்றுச்சீட்டின் மென்பிரதியை இணைத்துச் சமர்ப்பிக்கவும்.

கட்டணங்கள் அனைத்தும், வழமையான வைப்புச் சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் கிளையொன்றினூடாக மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
www.csc.jfn.ac.lk/expr
021 221 8194

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-8308)





**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**திரு. கந்தசாமி ரமணன்**

(வடமராட்சியில் பிறந்து இந்தியாவில் வசித்து வந்தவேளை சிவபதமடைந்தார்)

பிறப்பு : 18.03.1980
இறப்பு : 21.01.2023

ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உன் உயிர் மூச்சு மறைவதில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் ஒழிவதில்லை

தவப்பயனே எங்கள் கடைக்குட்டியே
உன்னை எப்படி மறப்பது
எல்லோருக்கும் பிடித்த உன்னை
மரணத்திற்கும் பிடித்து விட்டதோ?
முழுநிலவாய் இருந்த அம்மாவுடன்
நீயும் நிரந்தரமாய் போனாயோ
நிம்மதியாய் உறங்கடா

ஸ்ரீ ரமணா
மேற்கு, அல்வாய்.
077 170 7033 (18944)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை பிரிட்டன் தொடர்ந்து கண்காணிக்கும்

## பிரிட்டன் பாராளுமன்றில் தகவல்

(கொழும்பு)

**இலங்கையின் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை உன்னிப்பாக அவதானிக்கப் போவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.**

பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஆன் மேரி டிரெவெல்யான் இதனை பிரிட்டன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச இணைய சேவை வழங்குநர்கள் உட்பட ஏனையவர்களின் கரிசனைகளிற்கு மத்தியில் பிரிட்டன் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளதாக பிரிட்டன் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நான் இலங்கை ஜனாதிபதியை சந்தித்த வேளை இந்த சட்டம் கருத்து சுதந்திரம், பொருளாதார சுதந்திரத்தின் மீது ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் குறித்த கரிசனையை தெரிவித்திருந்தேன் என தெரிவித்துள்ள அவர் ஜனவரி 25 ஆம் திகதி தென்னாசியாவிற்கான இராஜாங்க அமைச்சர் தாரிக் பிரபு இலங்கை வெளிவிவகார அமைச்சரை சந்தித்தவேளை இது குறித்த கரிசனையை வெளியிட்டார் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# நாமல் ராஜபக்ஷ அயோத்தி விஜயம்



(கொழும்பு)

இரண்டு நாள் விஜயமாக அயோத்தி ராமர் கோவிலுக்குச் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி இன்று வெள்ளிக்கிழமை மாலை ராமர் கோவிலில் சிறப்பு தரிசனம் மற்றும் பூஜை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கு செல்லும் நாமல் அயோத்தி மற்றும் டெல்லியில் உயரதிகாரிகளை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மாலைதீவு படைப்பிரதானி இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

மாலைதீவுகளின் பாதுகாப்பு படைப்பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் அப்துல் ரஹீம் அப்துல் லத்தீப் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர், ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்னவையும்இராணுவத் தளபதியையும் சந்திக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் ஊழியர்கள் கல்லூரியின் அழைப்பிற்கிணங்க, மாலைதீவுகளின் பாதுகாப்பு படைப்பிரதானி நாட்டிற்கு வருகை தந்துள்ளார். (நி-5-6)

# இணையப் பாதுகாப்புச் சட்டத்தின் ஒரு எழுத்தைக்கூட மாற்ற முடியாது

## நீதி அமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

நிறைவேற்றப்பட்டுள்ள இணைய பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக எத்தனை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்ந்தாலும் ஒரு எழுத்தைக்கூட மாற்ற முடியாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி, இணைய பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபையில் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இதுதொடர்பாக ஆராய்வதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறு சபையில் நேற்று வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளிக்கும்போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்டமூலமொன்று சவாலுக்கு உட்படுத்தப்படுமானால், நாம் அதுதொடர்பாக பரிசீலனைகளை மேற்கொள்வோம்.

நீதிமன்றில் விசாரணைகள் ஆரம்பிக்கும் முன்னரே சட்டமா அதிபர் அதன் குறைகளை சுட்டிக்காட்டிவிடுவார்.

இணைய பாதுகாப்புச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி 40 இற்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வாரக்கணக்கில் இது தொடர்பாக விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம் பெற்றன.

நீதிமன்றத்தினால் சட்டத்தை கொண்டுவர முடியும் என்றோ கொண்டுவர முடியாது என்றோ அறிவிக்க அதிகாரம் கிடையாது. மாறாக சட்டமொன்று அரசமைப்புக்கு உட்பட்டதா இல்லையா என்பதை அறிவிக்கும் அதிகாரம் மட்டும் தான் நீதிமன்றத்துக்கு உள்ளது. இணைய பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக சட்டமா அதிபர் ஆராய்ந்துள்ளார். இது அரசமைப்புக்கு உட்பட்டது கிடையாது என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த சட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்னமும் விவாதிக்க முடியாது.

ஆனால், இந்த சட்டத்தில் ஏதேனும் திருத்தங்களை மேற்



கொள்ள வேண்டுமாக இருந்தால், அதனை திருத்த நாம் தயாராகவே உள்ளோம்.

அதனைவிடுத்து, இந்த சட்டம் தொடர்பாக மக்களுக்கு தவறான கருத்தை விதைக்க நினைப்பதால் எந்தவொரு பயனும் கிடையாது.

இந்த நிலையில், எத்தனை கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தினாலும் சட்டத்தின் ஒரு எழுத்தைக்கூட மாற்ற முடியாது.

இது அரசாங்கத்தை காப்பாற்றவோ, ஜனாதிபதியை காப்பாற்றவோ கொண்டு வரப்பட்டது கிடையாது" என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# 29 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களை பதியுங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தாமதமின்றி பெயர்களை பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யுமாறும் நிரந்தர வதிவிடத்தை மாற்றாது திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை பதிவு செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வாக்களிக்க முடியாவிட்டாலும் அவர்களது பெயர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# பாராளுமன்ற உறுப்பினராக ஜகத் பிரியங்கர



(கொழும்பு)

ஜகத் பிரியங்கர நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

விபத்தில் உயிரிழந்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த வினால் வெற்றிடமான ஆசனத்திற்கு ஜகத் பிரியங்கர சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (நி-5-6)

# ஆட்சி மாற்றம் ஒன்றே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு

## லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத்தான் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் தேர்தல் தொடர்பாக ஒரு வசனம் ஏதும் உள்ளதா? ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக நடைபெற வேண்டும். இதனை நடத்த ஒக்டோபர் வரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது.

மக்கள்ஆட்சிமாற்றமொன்றை விரும்புகிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு செவிசாய்க்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த



எம்மால் முடியுமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் செய்ய தயாராகவே உள்ளோம்.

ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத்தான் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண முடியும்" என லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# ரணில்-பொன்சேகா சந்திப்பு

## பரபரப்பாகும் கொழும்பு அரசியல்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்றத்தின் புதிய அமர்வை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய கொள்கை உரையின் பின்னர் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான சந்திப்பு சுமார் இருபது நிமிடங்கள் நீடித்ததுடன் அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர்

## சென்நீக்கிலஸ், கொற்றாவத்தை அடுத்த சுற்றுக்கு தகுதி





யாழின் நாயகன் உதை பந்தாட்ட தொடரில் சென் நீக்கிலஸ் மற்றும் கொற் றாவத்தை றேஞ்சஸ் அணி கள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் உதைபந் தாட்ட லீக்கின் அனுமதி யுடன் தெல்லிப்பழை நாம கள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந் தாட்ட சுற்றுப்போட்டி தெல் லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற முத லாவது ஆட்டத்தில் சென் நீக்கிலஸ் அணியை எதிர் த்து பொலிகை ஒற்றுமை அணி மோதியது.

இதில் சென் நீக்கிலஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெற்ற ஆட் டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர் த்து சென்பீற்றேஸ் அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற் றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3036

Search for people, places and things


### நிக்ஷன்




### நிரஞ்சனா




### மரிக்




### கவிதா




### வில்சன்




### யோகான்சி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீண்டும் பார்த்தீனியம்

**(யாழ்ப்பாணம்)**

**வட மாகாணத்தில் பார்த்தீனிய களைத் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பேராசிரியர் க. பகீரதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு பருவ மழைக்கு பின்பு வட மாகாணத்தில் பார்த்தீனிய ஆக்கிரமிப்பு களையின் தாக்கம் அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணம் முழுவதும் ஒரே நேரத்தில் பார்த்தீனிய களையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அனைத்து துறைசார்ந்தவர்களும் பொது மக்களை ஒன்றிணைத்து குறித்த நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

(நி-5-6)



நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளின் 75 ஆவது குருபூசை நிகழ்வுகளும் ஞான முத்து நூல் வெளியீடும் சுவாமிகள் அருளிச் செய்த பாடல்கள் அடங்கிய இசைப்பேழை வெளியீடும் நேற்று முன்தினம் புதன்கிழமை நயினாதீவு சோமஸ்கந்த ஈச்சரத்தில் இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர்

**திரு. சண்முகம் நிபோஜன்**

அவர்கள்

30.01.2024 அன்று தேசிய கல்விநிறுவகத்தால் BMICH, கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தை B.Ed.Agri.(Hons) பெற்றுக் கொண்டமைக்காக பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர் பதவிகளில் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.




ஆசிரியர் கழகம், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


## 2024 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை,வாகனப் பாதுகாப்பு நிலயத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.03.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 10.02.2024ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 22.02.2024ஆம் திகதி வியாழக்கிழமை வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கு முன் பின்வரும் கொடுப்பனவைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்பு தொகை |
|---|---|---|
| வாகனப்பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 10000.00 |
| சிற்றுண்டிச் சாலை | 1500.00 | 20000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 22.02.2024ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்பு தொகையினை செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் **திரு.கந்தசாமி முருகவேல், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி** எனும் முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2024 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை / வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்** என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரங்கள் 24.02.2024 (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கும் வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்பத்திரம் 24.02.2024 (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கும் கேள்வி சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி இல்லாத சந்தர்ப்பத்தில் தங்கள் பிரதிநிதியை பங்குகொள்ளக் கூடியவாறு கடிதம் வழங்கி அனுப்ப முடியும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

(சி-8306)

**தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.**

# இராசிபலன்

09.02.2024
தை 26, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 8.01 மணிவரை
அமாவாசை பின்னிரவு 5.55 மணிவரை

திருவோணம் பின்னிரவு 12.31 மணிவரை
சுபநேரம் -6.35-8.05 மணிவரை
இராகுகாலம்-11.05-12.35 மணிவரை
அமாவாசை விரதம்.

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்,
திருவாதிரை

**வள்ளவன்**

**மேஷம்** — வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** — நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**துலாம்** — செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — நல்லவர்களைச் சந்தித்து வளம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்** — சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களினால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** — நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியம் ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு** — செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்தினர்களுடன் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மனிதனின் ஆசைக்கு அளவு இல்லை. அவன் ஆற்றலுக்கு எல்லையில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விழிப்புக்குழு அமைக்க தீர்மானம்




(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கிராமம் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெற்ற கூட்டங்களின் போது சட்ட விரோத மணல் அகழ்வு, போதைவஸ்துப் பாவனை மற்றும் கால்நடைத் திருட்டு உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்கள் என்னிடம் கேட்டுக்கொண்டுள்ளன. இவ்வாறான சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கிராமம் தோறும் விழிப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. விழிப்புக் குழுக்கள் பொலிஸாரோடு இணைந்து சமூகத்தில் இடம் பெறுகின்ற சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்தார். (நி-5-6-30)



வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)

## 19 மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 19 தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கைதானவர்களை நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33-60)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார் பண்ணை (வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவில்) வேம்படிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவம், மறுநாள் சனிக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும். என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகக்கலைப் பயிற்சி நெறியின் (அடிப்படை) புதிய பிரிவு-2024/1 இற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 17.02.2024 தொடக்கம் 3 மாத காலப் பகுதி வரை வார இறுதி நாட்கள் மற் றும் அரச விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ளன.

எமது இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவம் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து, இப் பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

அத்துடன் விண்ணப்பப் படிவம் பெற்றுபதி வினை மேற்கொள்ளாதவர்களும் பயிற்சியின் ஆரம்ப தினத்தில் பயிற்சி நடைபெறும் இடத்திற்கு காலை 6 மணிக்கு வருகை தந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து வளவாளரிடம் தமது பதிவினை மேற்கொண்டு பயிற்சியில் இணைந்து கொள்ள முடியும் என செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-5-6)




கட்டுநாயக்க ஈகிள் லகூன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தால் வதிரி டைமண்ட்ஸ் விளையாட்டு கழகத்துக்கு விருது வழங்கி வைக்கப்பட்டது.

(படம்- மகாலிங்கம்)

## ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் "செம்பாத்தாள் "கூத்துருவ நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திரு மறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத்திற்கு தலைமை வகித்த மரிய செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து கற்பனையுடன் உருவாக்கப்பட்ட படைப்பாக "செம்பாத்தாள்" கூத்துருவ நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## உதைபந்தாட்ட காலிறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமத்திற்கு உட்பட்ட லீக் அணிகளுக்கிடையில் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு சென்லூட்ஸ் அணியை எதிர்த்து காளியம்பாள் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு வலிகாமம் எவ்.சி.அணியை எதிர்த்து சிவானந்தா அணியும் மோதவுள்ளன.

(நி-5-6-90)

## டெங்கு களத்தரிசிப்பு 7 பேருக்கு வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த 7 குடியிருப்பாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழில் டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு ஒழிப்பு பணிகளும் தீவிர மாக முன்னெடுக்கப்பட்டு வரு கிறது.

இந்நிலையில் கொக்குவில் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது டெங்கு நுளம்பு பெருகும் சூழலுடன் சுற்றாடலை வைத்திருந்த 7 பேருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 7 பேரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து கடுமையாக மன்று எச்சரித்ததோடு தலா 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 450 | 500 | 400 | 550 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 1000 | 1200 | 1050 |
| தக்காளி | 750 | 700 | 800 | 800 | 665 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 130 | 150 | 160 | 120 |
| கோவா | 600 | 450 | 600 | 600 | 650 |
| கரட் | 800 | 1000 | 1300 | 1200 | 1200 |
| பூசணி | 250 | 280 | 200 | 300 | 220 |
| புடோல் | 200 | 250 | 300 | 300 | 180 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 225 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 300 | 250-300 |
| பெரிய வெங்காயம் | 320 | 380 | 350 | 400 | 250-350 |
| பாகற்காய் | 800 | 500 | 600 | 600 | 500 |
| வெண்டக்காய் | 600 | 450 | 300 | 500 | 450 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 150 |
| பயற்றங்காய் | 400 | 450 | 600 | 500 | 560 |
| லீக்ஸ் | 450 | 480 | 600 | 600 | 500 |
| பீற்றூட் | 450 | 400 | 450 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 1200 | 800 |
| முருங்கைக்காய் | — | 2000 | 2000 | 2000 | 2150 |
| போஞ்சி | 350 | 300 | 450 | 600 | 480 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 500 | 350 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50-80 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 | 200 | 170 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 70-110 | 90-110 |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 350 | 250 |
| முள்ளங்கி | 160 | 150 | 250 | 300 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 80 | 130 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 70 |
| [illegible] | 100 | 100 | 80 | 160 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத் முதல்வருடன் தேசிய மக்கள் சக்தி சந்திப்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் இந்தியா- குஜராத்தின் முதல்வர் பூபேந்திர படேலுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சந்திப்பானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இந்த குழுவானது



ஐந்து நாட்கள் சுற்றுப்பயணமாக இந்தியா சென்றுள்ளது.

இதற்கமைய, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் வெளியுறவு செயலாளர் வினய் மோகன் ஆகியோருடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி, இந்த சுற்றுப்பயணத்தை கோரி இருந்த நிலையிலேயே இந்தியா அதற்கு சாதகமாக பதிலளித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தியாவிடம் இதே போன்ற வாய்ப்புக்களை மேலும் நாடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5-6)


# INVITATION FOR BID (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**
**DELFT PRADESHIYA SABHA**

**WORLD BANK AND EU FUNDED**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Loan & Grant from the World Bank & European Union towards the cost of **Local Development Support Project (LDSP)** and intends to apply part of the proceeds of this credit to payment under the contract for construction works as stated in the table below.

2. The chairman, local Authority Procurement Committee on behalf of the **Pradeshiya Sabha, Delft, Northern Province,** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost Rs.(Mn) | Contract Period (Days) | Required CIDA Grade & specialty | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | LDSP/NP/JAF/DPS/2024/PT3/04 | Renovation of Fish Market at Delft Public Market | 2.73 | 60 Days | C8 or Above (Buildings ) | 01-May-2024 | 41,000.00 | 29-May-2024 |
| 2 | LDSP/NP/JAF/DPS/2024/BT4/01 | Establishment of additional facilities in Delft public library | 4.25 | 90 Days | C8 or Above (Buildings ) | 01-May-2024 | 64,000.00 | 29-May-2024 |
| 3 | LDSP/NP/JAF/DPS/2024/BT4/02 | Upgrading the facilities of cultural hall Delft | 4.44 | 90 Days | C8 or Above (Buildings ) | 01-May-2024 | 67,000.00 | 29-May-2024 |
| 4 | LDSP/NP/JAF/DPS/2024/BT4/03 | Upgrading the facilities of Primary health care center Delft | 1.33 | 60 Days | C9 or Above (Buildings ) | 17-Apr-2024 | 20,000.00 | 15-May-2024 |
| 5 | LDSP/NP/JAF/DPS/2024/BT4/04 | Upgrading the facilities of multipurpose hall in the public library Delft | 0.70 | 60 Days | C9 or Above (Buildings ) | 17-Apr-2024 | 11,000.00 | 15-May-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions. And Domestic Contractors shall have been registered in the field of **Building** construction for grade mentioned in the table above with the Institute for Construction Industry Development Authority (CIDA).

5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 (Schedule) of the bidding document.

6. Interested eligible bidders may obtain further information from **Secretary, Delft Pradeshiya Sabha, Delft, (Tel.No.021 221 5211, Fax.021 221 5211, E-mail: tsecretarydelft@yahoo.com)** on any working day from 09:00 hrs. To 14:00 hrs. **09th February 2024** till **29th February 2024.**

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from 09th February 2024 until 29th February 2024 from 09:00 hrs. To 14:00 hrs. On working days upon payment of a non-refundable fee of Rs. 1500.00 for each contract. The method of payment should be by cash.

8. Bids shall be delivered in Original & Copy directly or sent by Registered Post to the address below on or before 14:30 hrs. On 29th February 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.

9. All Bids shall be accompanied by a bid security as per the information given in the table above.

10. Pre-bid meeting will be held on 20th February 2024 at 10:30 hrs. In the Pradeshiya Sabha Office, Delft. Interested bidders may attend the meeting at their own expense.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support project (LDSP)**
**Delft Pradeshiya Sabha,**
**Jaffna,**
**Northern Province.**

**09.02.2024**


## பிரான்ஸில் இருந்து அதிசொகுசு கப்பல்

(கொழும்பு)

பிரான்ஸில் இருந்து லீ ஜெகியுஷ் என்ற அதிசொகுசு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பல் நேற்று காலை முதல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

130 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 120 பணியாளர்களுடன் குறித்த கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பல் ஊடாக நாட்டை வந்தடைந்த சுற்றுலாப்பயணிகள் கொழும்பு உள்ளிட்ட பல இடங்களுக்கு பயணிக்கவுள்ளனர். (நி-5-6)

## வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் மருத்துவமனையில்

### துன்னாலையில் சம்பவம்

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்காகிய இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை வேம்படிப்பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனந்தெரியாதோர் பட்டா ரக வாகனத்தால் மோதி கீழே விழுந்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த 21 வயது இளைஞரை வாளால் சரமாரியாக தாக்கியதில் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.


அவருடன் பயணித்த மற்றவர் சிறிய காயத்துடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அந்தாட்டிக்காவிலும் செயற்பாட்டிற்கு வந்த சீனாவின் ஆராய்ச்சி மையம்



(பீஜிங்)

பனி சூழ்ந்த தனி கண்டமாக விளங்கும் அந்தாட்டிக்காவில் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ள உலக நாடுகள் போட்டிபோட்டு வரும் நிலையில் சீனா கட்டி முடித்த ஆராய்ச்சி மையம் செயற்பாட்டிற்கு வந்துள்ளது.

கிழக்கு அந்தாட்டிக்காவின் ராஸ் கடலோர பகுதியில் நாட்டின் 5ஆவது ஆராய்ச்சி மையத்தை சீனா கட்டி முடித்துள்ளது.

செயற்கைகோள் நிலையம், கண்காணிப்பகம் ஆகிய நவீன வசதிகளை இந்த புதிய ஆராய்ச்சி மையம் கொண்டுள்ளது.

"குயின்லிங்" என பெயரிடப்பட்டுள்ள இந்த நிலையம் தன்னுடைய ஆராய்ச்சி பணியை தொடங்க உள்ள நிலையில் சீன ஜனாதிபதி ஜின்பிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"மனித குலத்தின் நலனுக்காகவும் பாதுகாப்பான எதிர்காலத்திற்காகவும் அந்தாட்டிக்காவில் கட்டப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சி நிலையம் துணை புரியும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## போரை நிறுத்த மூன்று கட்ட செயற்றிட்டத்தை முன்வைத்த ஹமாஸ்

(காசா)

காசா பகுதியில் நான்கு மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரை நிறுத்த மூன்று கட்ட செயற்றிட்டத்தை ஹமாஸ் இயக்கம் முன்வைத்துள்ளது.

மூன்றாவது கட்டத்தின் முடிவில் இஸ்ரேலுடன் முழுமையான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என நம்புவதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி முதல் கட்டத்தில், இஸ்ரேல் சிறைகளில் உள்ள 1500 பாலஸ்தீன பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்பட்டால், ஹமாஸ் பிடியில் உள்ள 19 வயதுக்கு உட்பட்ட இஸ்ரேலைச் சேர்ந்த அனைத்து பெண்கள், ஆண்கள், வயதான மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

இரண்டாவது கட்டத்தில், மீதமுள்ள இஸ்ரேல் பணயக் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மூன்றாவது கட்டத்தில் இறந்தவர்களின் சடலங்களும்ஒப்படைக்கப்படும்எனதெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## மாணவர்களுக்கு அணு ஆயுதங்கள் தொடர்பில் பாடம் கற்பிக்க தயாராகும் ரஷ்யா



(மொஸ்கோ)

ரஷ்யாவில் உயர்நிலை பாடசாலை வகுப்புகளில் பயின்று வரும் மார்ணவர்களுக்கு அணு ஆயுத தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகள் கற்பிக்கப்பட இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"தாய்நாட்டை பாதுகாக்கும் அடிப்படைகள்" எனும் பாடத்தின் கீழ் போரில் இருந்து தற்காத்துக் கொள்ளும் பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பாடத் திட்டங்கள் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அந்நாட்டு கல்வித்துறை சார்ந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த பயிற்சியின் கீழ், உக்ரைனுடன் போர் நடைபெற்று வரும் நிலையில் திடீரென அணு ஆயுத போராக மாறும் பட்சத்தில் மாணவர்கள் தங்களை எப்படி தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் பேரழிவு ஆயுதங்களின் திறன் மற்றும் அவற்றின் சேதப்படுத்தும் விளைவுகள், அதில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளையும் கற்றுக் கொள்வர்.

இதுமட்டுமன்றி அடிப்படை இராணுவ பயிற்சி, கலாஷ்நிகோவ் ரைஃபிள், கையெறி குண்டுகளை எப்படி கையாள வேண்டும் என்பதும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட இருக்கிறது என செய்திகள் வெளியாகியுள்ளன. (நி-5-6)

## பதற்றத்திற்... பாகிஸ்தானில்...


(இஸ்லாமாபாத்)

இரட்டை குண்டுவெடிப்பு பதற்றத்தி... பாகிஸ்தானின் பாராளுமன்றத் ே... பெற்றது.

பாகிஸ்தானின் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இந்த மாதம் 8ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தால் கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் உள்ள 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்கு நிலையங்களில் நடைபெறும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க 12.85 கோடி பேர் பதிவு செய்துள்ளனர்.

தி... கு... ெ... ட... பி...



## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் அறுவர் பலி, 46 பேர் மாயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிழந்ததோடு 46 பேர் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் தங்கச் சுரங்கங்கள் அமைந்துள்ள கிராமமொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நிலச்சரிவு ஏற்பட்டது.


இதன்போது காணாமல் போனவர்களில் 27 பேர் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த 2 பேருந்துகளில் அமர்ந்திருந்த சுரங்கத் தொழிலாளர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அனர்த்தம் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவம், பொலிஸார் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நிலச்சரிவில் காயமடைந்த 31 பேரை மீட்டனர்.

இந்நிலச்சரிவில் 300 குடும்பங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாகோ நகரில் தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த சுமார் 2 ஆயிரம் பேரை அங்கிருந்து அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர். (நி-5-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ற்கு மத்தியில் ில் பொதுத்தேர்தல்

## றத்திற்கு மத்தியில் றத் தேர்தல் நடை



இந்நிலையில் நேற்று முன் தினம் பாகிஸ்தானில் இரட்டை குண்டுவெடிப்பு சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிஷின் மாவட்டத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 20 பேர் உயிரிழந்ததோடு

இந்த சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்துக்குள், கில்லா அப்துல்லா பகுதியில் உள்ள ஜாமியத்-உலேமா இஸ்லாம்-பாகிஸ்தான் கட்சி அலுவலகத்தில் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது.



இதில் 10 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற முந்தைய பொதுத்தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்த முன்னாள் பிரதமர் இம்ரான் கான், ஊழல் மற்றும் ரகசியக் காப்புறுதி மீறல் வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் இந்தத் தேர்தலில் பங்கேற்க முடியாது.

பாராளுமன்றத்தின் 336 இடங்களுக்கும் நடைபெறும் இந்தத் தேர்தலில் மொத்தம் 5,121 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் 4,807 பேர் ஆண்கள், 312 பேர் பெண்கள், 2 பேர் திருநங்கைகள் என்று பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 20 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் இடம்பெறுவதற்கான தேர்தல் திகதி அறிவித்த நாளில் இருந்து ஆங்காங்கே குண்டு வெடிப்பு மற்றும் வன்முறை சம்பவங்கள் நடந்து வருகிறது.

பல்வேறு இடங்களில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பிஷின் மாவட்டத்தில், நேற்று முன்தினம் சுயேட்சை தேர்தல் வேட்பாளரின் அலுவலகம் அருகே குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது. (நி-5-6)

## வியட்நாமில் ஒரு மணித்தியாலத்தில் ஐந்து முறை நிலநடுக்கம் பதிவு

(ஹனோய்)

வியட்நாம்-மத்திய ஹைலேண்ட் மாகாணமான கோன் தும் பகுதியில் உள்ள கோன் ப்லாங் மாவட்டத்தில் ஒரே நாளில் 5 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று முன்தினம் காலை 8.41 மணியளவில் பதிவாகியுள்ளது. இந்த நில நடுக்கம் ஒரு மணித்தியாலத்திற்குள் தொடர்ந்து 5 முறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கங்கள் முறையே 4.0, 3.3, 2.8, 2.5 மற்றும் 3.7 என்ற ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளன.

இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் லேசாக அதிர்ந்த போதும் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து 5 முறை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (நி-5-6)

## பனியில் குழந்தை போல் உறங்கும் பனிக்கரடி

### பிரிட்டன் கலைஞருக்கு விருது



(லண்டன்)

இளம் துருவ கரடி பனிப்பாறையில் உறங்கச் செல்லும் அற்புதமான புகைப்படம் வரைந்த பிரிட்டன் புகைப்படக் கலைஞர் நிமா சாரிகானி இவ் ஆண்டின் சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞருக்கான பீப்பிள்ஸ் சாய்ஸ் விருதை வென்றுள்ளார்.

இவரது புகைப்படங்களில், அனைவரின் சிந்தனையைத் தூண்டும் மற்றும் விலங்குக்கும் அதன் வாழ்விடத்திற்கும் இடையிலான ஒருங்கிணைந்த பிணைப்பின் அப்பட்டமான தன்மையை வெளிப்படுத்துகின்றது.

நோர்வேயின் ஸ்வால்பார்ட் தீவுக்கு துருவ கரடிகளைத் தேடி மூன்று நாட்கள் பயணம் மேற்கொண்டு குறித்த புகைப்படத்தை படம்பிடித்துள்ளார். (நி-5-6)

## மின்சாரத்தை உருவாக்கிய காசாவின் இளம் விஞ்ஞானி


(காசா)


காசாவில் அழித்தொழிக்கப்பட்டுவரும் மின்சாரத்தை உருவாக்கி 15 வயது இளம் விஞ்ஞானி அனைவரையும் திரும்பிபார்க்க வைத்துள்ளார்.

காசாவில் நடந்து வரும் இஸ்ரேலின் தாக்குதல்களால் பாலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகளுக்கே அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் காசா மக்களுக்களின் வாழ்க்கையில் ஒரு இளம் விஞ்ஞானி ஒளியேற்றியிருக்கிறார்.

15 வயதான ஹுசாம் அல்-அத்தார் 'காஸாவின் நியூட்டன்' எனப் பெயர் பெற்றுள்ளார். கட்டடங்கள் அனைத்தும் குப்பைகளாகி நிலை குலைந்திருக்கும் காசாவில் கிடைத்த பொருட்களை வைத்து மின்சாரம் தயாரித்திருக்கிறார் அந்த இளம் விஞ்ஞானி.

இஸ்ரேலின் இரக்கமற்ற





தாக்குதலுக்கு பயந்து இடம் பெயர்ந்த மக்கள் முகாமிட்டிருக்கும் இடங்களுக்கு காற்று மூலம் மின்சாரம் தயாரிக்க வழிவகை செய்துள்ளார்.

இணையத்தளத்தில் இச்சிறுவனுக்கு பெரும் பாராட்டுகள் குவிந்துகொண்டிருக்கிறது.

'இருளுக்குள் இருந்த என் சகோதரர்களைப் பார்த்தேன். அவர்கள் கண்ணில் பயம் மட்டுமே எனக்குத் தெரிந்தது.

அவர்களுக்கு மகிழ்ச்சியையும் வெளிச்சத்தையும் அளிக்க நினைத்தேன்' என ஹுசாம் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மொத்த காசாவையும் இருளில் மூழ்கடித்திருக்கும் வேளையில் இந்தச் சிறுவனின் முயற்சி கும்மிருட்டில் பிரகாசமாகத் தெரிகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னைச் செய்கையாளர்களே! தென்னையினை அழிக்க புதிய பீடை வந்துவிட்டது அதுதான் தென்னை வெள்ளை ஈ (Coconut White Fly)

இலங்கையில் தென்னைகளைத் தாக்கி விளைச்சலினைக் குறைத்து மரத்தினையே படச்செய்யும் புதிய பீடையான தென்னை வெள்ளை ஈ (Coconut White Fly) பரவி வருகின்றது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவுகின்றது. இதனை உடன் கட்டுப்படுத்துங்கள். இல்லையேல் தேங்காய் உற்பத்தி பாரிய அளவில் பாதிக்கப்படும்.

இலங்கையில் பல வருடங்களாக தென்னைச் செய்கையினைப் பாதிக்கும் 'மைற்' பீடையினைத் தொடர்ந்து தென்னை வெள்ளை ஈ 2019 ஆம் ஆண்டில் முதன்முதலாக கேகாலை மாவட்டத்தில் இனங்காணப்பட்டது. பின்பு குருநாகல், கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அம்பாந்தோட்டை, மாவட்டங்களுக்கு பரவியது. 2021ஆம் ஆண்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் கூடுதலான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இந்த புதிய பீடையானது யாழ்.மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பரவத் தொடங்கி இந்த மாதம் (பெப்ரவரி) மிகவும் வேகமாக பரவிக் கொண்டிருக்கின்றது. இந்த தென்னை வெள்ளை ஈ (Cocnut White Fly) இன் பிறப்பிடம் அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாகாணம் ஆகும். 2016 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள கோவை மாவட்டத்தில் தொடங்கி கேரளா வரை பரவியது. இதன் பின்பு தற்சமயம் இலங்கைக்கு வந்து விட்டது.

முக்கியமாக வெள்ளை ஈயினை பல இனங்களாக வகைப்படுத்தலாம். தென்னை மட்டுமல்லாது ஏனைய பயிர்களையும் தாக்கி சேதத்திற்குள்ளாக்கும். ஆனால் இலங்கையில் தென்னையில் சேதத்தினை விளைவிப்பது இரு இனங்கள் என தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

1. Rugose Spiraling (றூகோஸ்)
2. Aleurodicus Cocois (அலேயுரோடிக்கஸ்)

**தாக்கத்தின் அறிகுறிகள்**

தென்னை வெள்ளை ஈ தென்னோலையின் அடிப் பகுதியில் பச்சையத்தினை (குளோரோபில்) உண்டு தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் நாளடைவில் தென்னோலை கருகிய தோற்றமளிக்கும். இதன் கழிவு தென்னோலையின் கீழ்ப்பகுதியில் விழுவதனால் கறுப்பு நிறமாகும். இதன் விளைவாக கறுப்பு பங்கசு தாக்கமும் ஏற்படுகின்றது.

தென்னோலையின் கீழ்ப் பகுதியில் வெள்ளை ஈ திரவத்தினைச் சுரந்து முட்டைகளை இடுவதனால் முட்டைகள் ஓலையில் ஒட்டிக் கொள்ளும்.

கூடுதலாக செவ்விளநீர், கலப்பின (Hybrid) இனங்களில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. கீழே இருந்து தென்னையின் விட்டுப் பகுதியினை பார்க்கும் போது கண்ணில் தென்படத்தக்கதாக சிற்றோலைகளில் பனிப் படலம் படர்ந்தது மாதிரி வெண்மையாக தோற்றமளிக்கும். இரவு 7 மணியிலிருந்து 11 மணிவரைதான் தாக்கத்தின் உச்சக்காலம் ஆகும். இந் நேரத்தில் தென்னை மரத்தின் கீழ் இருந்து ரோச்லைட் வெளிச்சத்தினை பாய்ச்சினால் மிகவும் துலக்கமாக அதன் தாக்கம் தெரியும் (அனுபவ உண்மை).

இத்தாக்கத்தினால் தேங்காய் விளைச்சலில் அதிக பாதிப்பு ஏற்படும்.

தென்னை வெள்ளை ஈ தென்னையின் அடிப்பகுதியில் சுருள் சுருளாக முட்டையிட்டு பெருகும் போது பச்சைய இழப்பு ஏற்படுவதனால் உணவு உற்பத்தி (ஒளித்தொகுப்பு) பாதிக்கப்பட்டு மரம் இறப்பதற்கு சந்தர்ப்பம் உண்டாகும்.

**கட்டுப்பாட்டு முறைகள்**

Power Sprayer (வலுத்தெளி கருவி மூலம்) உயர் அமுக்கத்தில் மரத்தின் கீழ்ப் பகுதியிலிருந்து மேல் நோக்கி தென்னை சிற்றோலைகளில் படத்தக்கவாறு தண்ணீரை விசிறவும். இதனால் வெள்ளை ஈ முட்டைகள், பருவ நிலைகள் எல்லா கழுவப்பட்டு தாக்கம் குறையும்.



ஜெ.சத்தியேந்திரன்,
ஓய்வுநிலை உதவிப்பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

தென்னை ஆராய்ச்சி நிலைய சிபார்சின்படி,

வேப்பெண்ணை -10 மில்லி லீற்றர், சோப்பவுடர்-5 கிராம், தண்ணீர்- 1 லீற்றர்.

இந்த அளவுப் பிரமாணத்தில் மூன்றையும் கலந்து தேவையான அளவு மரத்திகேற்ப வலுத்தெளி கருவி மூலம் ஓலையின் அடிப்பகுதிக்கு படத்தக்கவாறு விசிறவும்.

பஞ்ச கௌவியத்தினை 3 லீற்றர் எடுத்து 10 லீற்றர் தண்ணீரில் கலந்து விசிறலாம்.

வெறுமையான 1 லீற்றர் தண்ணீர் போத்தலில் சிறிதளவு நெத்தலி கருவாட்டு தூளினை அதற்கு இட்டு 1 லீற்றர் தண்ணீரில் கலந்து மூடிப்பகுதிக்கு கீழாக சிறிதளவு இடைவெளி விட்டு மூடாமல் தென்னோலை மட்டைகளில் கட்டி தொங்க விட வேண்டும். இது ஒரு இசைக் கவர்ச்சி பொறி முறையாகும்.


1 ஏக்கர் தென்னந்தோட்டத்திற்கு 15-20 போத்தல் போதுமானது.

தேவையற்ற காய்ந்த மட்டைகளை வெட்டிவிடவும்.


5 அடி X 1 1/2 அடி நீள அகலமுள்ள மஞ்சள் பொலித்தீன் வாங்கி தென்னையினை சுற்றி (அடியிலிருந்து 7 அடிக்கு மேலே) கட்டி விடவும். அதன் மேற்பரப்பில் கிறிஸ் பூசிவிடவும்.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தினருடன் கதைத்த போது உயிரினவியல் கட்டுப்பாட்டு முறை பற்றி ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரசாயன பூச்சி நாசினிகள் பாவிப்பதனை இயன்றளவு தவிர்க்கவும்.



முதிர் வெண் ஈ பெண் (Rugose)




அதன் வாழ்க்கை வட்டம்

077 505 6263

# இன்று ஒரு தகவல் 31



தென்கச்சி கோசுவாமிநாதன்

## மீன்களும் பாடும்

இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்தது.

அந்த சமயத்தில்...ஜேர்மனிய கடற்படையிடம் "யு" போர்ட் என்கின்ற கப்பல்கள் இருந்தன. அந்த கப்பல்கள் இருக்கிற இடத்தை ரகசியமாகக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்க கடற்படை ஹைட்ரோ போன் என்னும் கருவியை உபயோகப்படுத்தியது.

மைக்ரோ போன் என்கிறோம் அல்லவா. அது போல தண்ணீருக்கு ள்ள உபயோகப்படுகிற மைக்தான் ஹைட்ரோ போன். இந்த கருவி களை கடலுக்குள்ளே இறக்கி ஆராய்ந்து கொண்டு இருக்கும் பொழுது....

எதிர்பாராத சில சத்தங்கள் கேட்டதாம்.

எங்கே இருந்து வருகிறது இந்த சத்தமெல்லாம் என்று மறுபடியும் முயற்சி செய்து பார்த்தாங்களாம். அப்புறம் தான் தெரிஞ்சிருக்கு.

அதெல்லாம் கடலிலே உள்ள சில மீன்கள் போடுகின்ற சத்தம் என்று.

இன்னும் கொஞ்சம் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து பார்த்திருக்காங்க.

அதுக்கப்புறம் தான் தெரிஞ்சதாம் அதல்லாம் வெறும் சத்தமில்லை சங்கீதம் என்று.

ஆமாம் !சங்கீதம் என்பது ஏதோ மனிதனுக்கு மட்டும் சொந்தமான ஒரு சங்கதி என்று நினைத்து விடாதீர்கள்.

பறவைகளுக்கும் பாடத் தெரியும்!

மீன்களுக்கும் பாடத்தெரியும்!

அதுகளுக்கு பாடத்தெரியும் என்பது சமீபகாலமாக தான் நமக்கு தெரியும்!

இந்திய வானம்பாடி .. நல்லா பாடக்கூடியது தான். அதனாலே தான் அது வானம்பாடி. ஒரு சில பறவைகள் (Jack daws, Magpies,Star lings) கிளிகள் மாதிரி பேசும். பாடவும் செய்யும்.

மணிப்பறவை என்று ஒன்று (Bell Bird) தென் அமெரிக்கா, ஆபிரிக்கா நாடுகளிலே இது அதிகம்.

அது பாடுகின்ற பாட்டு அதிக தூரம் வரை கேட்குமாம்.

ஐரோப்பாவில் உள்ள தேன்சிட்டு அவுஸ்திரேலியாவில் உள்ள லயர் பறவை இதெல்லாம் நல்லா பாடுமாம்.

இமயமலைப் பகுதியில் உள்ள ஒரு வகைப்பறவை நல்லா விசிலடிக் குமாம். அங்கே உள்ள 'பார்பட்' என்னும் பறவை நம்மள மாதிரியே தன்னுடைய குரலை தானே கேட்டு ரசிக்குமாம்.மீன்களை பொறுத்தவரை டாம்செல்,காட், ஹேடாக் இதெல்லாம் நல்லா சத்தம் போடுமாம்.

ஹேடாக் மீன் போடும் சத்தம் மோட்டார் சைக்கிள் சத்தம் மாதிரி இருக்கும். அது அந்த மீனின் காதல் பாடல்.

காட் மீனின் ஒலி முனகல் ஒலி மாதிரி கேட்கும். கடலிலே நல்லா பாடக்கூடியது திமிங்கலம்.

அமெரிக்காவிலே இரண்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் திமிங்கலம் போடும் சத்தத்தை பதிவு செய்தாங்களாம்.

வடபசுபிக் பெருங்கடலிலே 460 திமிங்கலங்களின் சத்தம். அட்லாண்டிக் பெருங்கடலிலே 88 திமிங்கலங்களின் சத்தம். இது எல்லாத்தையும் பதிவு பண்ணி கம்யூட்டரிலே கொடுத்து பார்த்தாங்களாம்.

அப்புறம்தான் அதிலே எல்லாம் ஒரு தாள லயம் இருக்கிறது என்பது தெரிய வந்ததாம்.

அதாவது அதெல்லாம் வெறும் சத்தமில்லை தாளத்திற்கு கட்டுப்பட்டு வருகின்ற பாட்டு.

ஒரு அணியிலே உள்ள திமிங்கலம் எல்லாம் ஒரே பாடலை தான் பாடுதாம். காலப்போக்கில் அந்த பாடல்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றது என்பதையும் கண்டுபிடித்தார்களாம்.

அதனாலே மனிதர்கள் தங்களுக்கு தான் பாடத் தெரியும் என்று மார் தட்டிக்க வேண்டாம்.

மீனுக்கு பாடத் தெரியும். திமிங்கலத்துக்கும் பாடத் தெரியும். நம்மிலே சில பேர் பாடகர்களாக இருக்கிறதனால பக்கத்து வீட்டுக்காரங்களுக்கு சில சௌகரியங்கள் கூட ஏற்படுவதுண்டு.

ஒரு பாடகரை தேடி பக்கத்து வீட்டில் இருந்த ஒருத்தர் வந்தார். சார் நீங்க ஒரு சங்கீத வித்துவானாக இருக்கிறது என்னோட அதிர்ஷடம் என்றார்.

ஆமாம் சார்.. உங்க பக்கத்து வீட்டுக்காரன் தன்னுடைய வீட்டை எங்ககிட்ட பாதி விலைக்கு விற்று விட்டு போய் விட்டான்சார். அப்படி என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு விழா



அரச அதிபரென வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்றிய றூபவதி கேதீஸ்வரனுக்கு மணிவிழா ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சேவைக்காலத்தினை நிறைவு செய்யவுள்ள அரச அதிபரின் சேவையை பாராட்டும் வகையில் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இவர் கிளிநொச்சிமாவட்டத்தின்முதல் பெண் அரச அதிபரென வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# 500 ஏக்கரை சுவீகரிக்க முயற்சி

## போராட்டம் நடத்த பலதரப்புக்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுக்க பல்வேறு தரப்புக்களும் தீர்மானித்து உள்ளன.

வலி.வடக்கு பிரதேசத்தில் இன்னமும் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாமல் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் நிலையில் காணிகளை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்களால் பல வருடங்களாக கோரிக்கை முன் வைக்கப்பட்டு வருவதுடன் காணி விடுவிப்பு போராட்டங்களையும் பல்வேறு தடவைகள் முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் யாழ்.சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு என 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள் குடியேறிய காணிகளையும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குரும்பசிட்டி , கட்டுவான் மற்றும் குப்பிழான் வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள காணிகளும் சுவீகரிக்கப்படவுள்ளன. அதில் மக்கள் மீள் குடியேறியுள்ள காணிகளும் உள்ளடங்கியுள்ளன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், அந்த கிராம அமைப்புக்கள் அண்மையில் கூடி ஆராய்ந்து, தமது காணிகளை சுவீகரிக்கும் திட்டங்களை முன்னெடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என முதல் கட்டமாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட செயலர் ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுப்பது என தீர்மானித்துள்ளனர். (நி-5-6-33)

# ஆழ்துளைக் கிணறுகளால் நிலத்தடி நீர்மட்டம் பாதிப்பு

## மல்லிகைத் தீவு கிராம மக்கள்

(அக்கராயன்)

புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தொடர்ச்சியாக நீர் வெளியில் கொண்டு செல்லப்படுவதனால் மல்லிகைத்தீவின் நிலத்தடி நீர் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மல்லிகைத் தீவு உயரமான தரைத் தோற்றத்தினை கொண்ட கிராமமாகும். இக்கிராமத்தில் உள்ள திறந்த கிணறுகள் நாற்பது அடிக்கு மேல் ஆழங்கொண்டவை. இந்நிலையில் அமைக்கப்பட்டுள்ள மூன்று ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தொடர்ச்சியாக நீர் வெளியில் கொண்டு செல்லப்படுவதனால் திறந்த கிணறுகளின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து செல்கின்றது.

அன்றாட வாழ்க்கைக்கு தேவையான ஜீவனோபாயமான குடிநீர் அற்றுப்போவதால் அக்கிராம மக்கள் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(நி-5-6-350)

# நெல் உலரவிட்டு கொண்டிருந்த 4 நபர்களை மோதித்தள்ளிய டிப்பர்

## பூநகரியில் சம்பவம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி சாமிபுலம் பகுதியில் நெல் உலரவிட்டு கொண்டிருந்தவர்கள் மீது டிப்பர் மோதியதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பரந்தன் பூநகரி வீதியில் சாமிப்புலம் பாடசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு நெல்லினை வீதியில் உலர விட்டு கொண்டிருந்தவர்களை பூநகரி பக்கமாக இருந்து வேகமாக வந்த டிப்பர் மோதியதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

23 வயதுடைய உதயகுமார் குயிலன், 25 வயதுடைய சபாரத்தினம் துயவன், 40 வயதுடைய கணேஸ், 8 வயதுடைய கபிசன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளை மோதிய டிப்பர் நிறுத்தாமலே தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-350)

# மதுபோதையில் சாரத்தியம் ரூ.185,000 தண்டம் விதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பல பகுதிகளில் மது போதையில் வாகனம் செலுத்திய நான்கு பேருக்கு ஒரு இலட்சத்து எண்பத்து ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களும் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வரி, காப்புறுதி மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரை கைது செய்து வழக்கு பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய வேளை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு 80 ஆயிரம் ரூபாய் தண்டமும் அதே வேளை சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மது போதையில் வாகனம் செலுத்திய பிறிதொரு நபருக்கு55 ஆயிரம் ரூபாய் தண்டம் மற்றும் மது போதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேருக்கு தலா 25,000 தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களும் ஒரு மாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# 1200 போதை மாத்திரைகள் மீட்பு

## இருவர் கைது

(மன்னார்)

மன்னாரில் விற்பனைக்கு தயாராக இருந்த 1200 போதை மாத்திரைகளுடன் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நானாட்டன் பிரதேசத்தை சேர்ந்த 23 வயதான பெண், 45 வயதான ஆணும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் கடற்படை அதிகாரிகளால் நானாட்டான் சிலாபத்துறை பகுதியில் முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையின் போது குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய குழுக்கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின்விவசாயத் துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் முன்கொண்டு வரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன. கடந்த கால கூட்ட அறிக்கை, நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், கால போக பயிர்ச்செய்கை, துறை சார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதன் போது, மாவட்ட விவசாய பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயம் காப்புறுதி, மாகாண விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், விதை ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் செயற்பாடுகள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவுகள் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6-315-316)

# சட்டவிரோத பொருட்கள் அழிப்பு



(குருமன்காடு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட் 4 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் வவுனியா பம்மைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படவிருந்த அரிசி, மஞ்சள், கொத்தமல்லி, நிலக்கடலை, உட்பட 7000 கிலோகிராம் உணவுப்பொருட்களும் சட்டவிரோத கிருமிநாசினிகளுமே மேலதிக நீதிவான் ஜெ.சுபாஜினி, சிங்கள பிரதேச சபை செயலாளர் விமல வேணி நிசங்க, சுகாதார பரிசோதகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

# நெற் பயிர்ச்செய்கையை சேதப்படுத்தும் காட்டு யானைகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புக்கும் வற்றாப்பளைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்ச் செய்கையினை யானைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கேப்பாப்புலவு காட்டு வழியாக வருகை தரும் யானைகளே அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அழித்து வருவதாகவும் இதன் காரணமாக விவசாயிகள் இரவு பகலாக காவலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

பயிர்ச்செய்கைக் கூட்டங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வேலி அமைத்து தாருங்கள் என கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என தெரிவித்தனர். (நி-5-6-350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 401





சிருஷ்டித்த சிங்காதனம் இதோ தங்களுக்காகக் காத்திருக்கிறது. இதில் அமரவும். இந்த மணி மகுடமும் செங்கோலும் தரிக்கவும் தங்களுக்குச் சம்மதமா?"

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வந்தியத்தேவன் மிக்க பரபரப்பை அடைந்தான். இளவரசரைத் தூக்கி அந்தக் கணமே உட்கார வைத்து விட்டால் என்ன என்று எண்ணினான். ஆனால் இளவரசருடைய முகபாவத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

முன்போலவே அமைதியான குரலில், "அத்தியட் சகா! அது எப்படிச் சாத்தியம்? இந்தச் சிங்காதனத்தில் ஏறி முடிசூடிய மகிந்த மன்னர் இன்றும் ஜீவிய வந்தவராக இருக்கிறாரே? அவர் இருக்குமிடம் தெரியாவிட்டாலும்" என்று கூறி நிறுத்தினார்.

"இளவரசே! இலங்கை இராஜ வம்சம் மாறவேண்டும் என்பது தேவர்களின் கட்டளை அது நடந்தே தீரும். கங்கை பாயும் வங்க நாட்டிலிருந்து வந்த விஜயராஜன் ஸ்தாபித்த இந்த வம்சத்தில் எத்தனையோ மகா ராஜர்கள் தோன்றினார்கள். தர்மத்தையும் பரிபாலித்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இந்த வம்சம் பல கொடிய கிருத்யங்களைச் செய்து தேவ சாபத்துக்கு ஆளாகி விட்டது. இந்த வம்சத்தில் பிறந்தவர்களிலே தகப்பன் மகனைக் கொன்றான், மகனைத் தகப்பன் கொன்றான், அண்ணனைத் தம்பி கொன்றான், தம்பியை அண்ணன் கொன்றான், தாய் மகளைக் கொன்றாள், மருமகள் மாமியாரைக் கொன்றாள். இத்தகைய மகா பாதகங்களைச் செய்த வம்சத்தவர்கள் புத்த தர்மத்தைப் பரிபாலிக்கத் தகுதி வாய்ந்தவர்கள் அல்ல என்று தேவர்கள் கட்டளையிடுகிறார்கள். கடைசியாக முடிசூடிய மகிந்தன் இலங்கைச் சிம்மாசனத்துக்கு உரிமையை இழந்து விட்டான். அப்படி இராஜ வம்சம் மாறும் போது புதிய வம்சத்தின் முதல்வனைத் தெரிந்தெடுக்கும் உரிமை இந்தச் சங்கத்துக்கு உண்டு. இந்தச் சங்கத்தாரும் தங்களைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறார்கள். தாங்கள் சம்மதம் கொடுத்தால் இன்று இரவே முடிசூட்டு விழா நடத்தி விடலாம்."

அந்த மண்டபத்தில் சிறிது நேரம் பூகர்ப்பத்திலும் கடலின் ஆழத்திலும் குடிகொண்டிருப்பது போன்ற நிசப்தம் குடிகொண்டிருந்தது. வந்தியத்தேவனுடைய பரபரப்பு உச்சநிலையை அடைந்து விட்டது. அச்சமயத்தில் பொன்னியின் செல்வர் தமது பீடத்திலிருந்து எழுந்து புத்த பிக்குகளின் சங்கத்துக்கு வணக்கம் செலுத்தினார். வந்தியத்தேவன் குதூகலத்தின் எல்லையை அடைந்தான். இளவரசர் சிம்மாசனத்தில் அமர்ந்ததும் மணி மகுடத்தை எடுத்துத் தானே சூட்டி விடலாம் என்று ஆத்திரப்பட்டான்.

இளவரசர் கூறினார்:- "மகான்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். இந்தச் சிறுவனிடம் எல்லையில்லா அன்பும் நம்பிக்கையும் வைத்து இந்தப் புராதன சிங்காதனத்தை அளிக்க முன்வந்த உங்கள் பெருந்தன்மையைப் போற்றி வணங்குகிறேன். ஆனால் தாங்கள் இப்போது இடும் பணி என் சக்திக்கு அப்பாற்பட்டது. நான் சோழ நாட்டில் பிறந்து வளர்ந்தவன். அந்த நாட்டு நிலங்கள் தந்த உணவு, நதிகள் அளித்த நீரும் இந்த உடலை ஆக்கின. என் தந்தை சுந்தரசோழ சக்கரவர்த்தியின் கட்டளைக்கு உட்பட்டு இங்கே வந்தேன்.

(தொடரும்...)

இலங்கை இராஜவம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் அனைவரும் இந்தச் சிங்காசனத்தில் அமர்ந்து, இந்த மணி மகுடத்தை அணிந்து, இந்தச் செங்கோலைக் கையில் தரித்த பிறகே, புத்த சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசர்களானார்கள். துஷ்டகமனு சக்கரவர்த்தியும் தேவநம்பிய தீசரும் மகாசேனரும் அமர்ந்து முடிசூடிய சிங்காதனம் இது. அவர்கள் சிரசில் தரித்த கிரீடம் இது. அவர்கள் கரத்தில் ஏந்திய செங்கோல் இது. இப்படிப்பட்ட புராதன சிங்காதனம் ஆயிரம் ஆண்டுகளாக அரசர்களைச்



# சிறுவர் அரங்கம்

## வல்லவனுக்கு வல்லவன் எப்போதும் உண்டு


ஒரு காட்டு பகுதியில் ஒரு சேவல் வாழ்ந்து கிட்டு வந்துச்சு.

அந்த சேவல் ஒரு நாள் சாயந்திரம் தன்னோட சாப்பாட சாப்பிட்டுட்டு மரத்து மேல ஏறி தூங்க போச்சு.

அப்ப அங்க ஒரு நரி வந்துச்சு. மரத்து மேல இருக்குற சேவல பார்த்த அந்த நரி அடடா இந்த சேவல் எவ்வளவு பெருசா இருக்கு இத அடிச்சி தின்னனும்னா எப்படி இருக்கும்னு யோசிச்சுச்சு.

ஆனா அந்த சேவல் மரத்து மேல இருக்கே. எப்படி அத கீழ வர வைக்குறதுனு யோசிச்சுச்சு அந்த நரி.

அப்பத்தான் அதுக்கு ஒரு யோசனை வந்துச்சு. உடனே சேவலை பார்த்து சொல்லுச்சு. ஏய் சேவலே உனக்கு ஒரு நல்ல சேதி தெரியுமானு கேட்டுச்சு.



மரத்துமேல இருந்த அந்த சேவல் கீழ வராம என்ன நல்ல சேதின்னு கேட்டுச்சு.

அதுக்கு அந்த நரி சொல்லுச்சு. இந்த காட்டுல இருக்குற எல்லா மிருகங்களும் பறவைகளும் சமாதானமா போயிடுச்சுங்க. இனிமே யார் யாரையும் அடிச்சி திங்க போறது இல்லைனு சொல்லுச்சு.

அத கேட்ட சேவலுக்கு ஒரு சின்ன சந்தேகம் வந்துச்சு. இத ஏன் இப்ப வந்து இந்த நரி தங்கிட்ட சொல்லுதுனு யோசிச்சுச்சு. இருந்தாலும் நரி கிட்ட பாதுகாப்பா இருக்க முடிவு பண்ணுச்சு.

தொடர்ந்து பேசின நரி, காட்டு மிருகங்கள் எல்லாமே நல்ல சேதி கேட்டு நட்பா மாறிடுச்சுகள். நீயும் கீழ இறங்கி வா. நாமளும்நண்பர்களாக மாறி அந்த நல்ல சேதிய கொண்டாடலாம்னு சொல்லுச்சு.

நரியோட தந்திரத்தை பத்தி தெரிஞ்சி வச்சிருந்த அந்த புத்திசாலி சேவல் அப்படியா ரொம்ப நல்லது. நரியாரே அங்க பாருங்க வேட்டை நாய்கள் கூட்டமா வருது. வாங்க அதுங்களுக்கும் நல்ல சேதியை சொல்லி நண்பர்களாக ஆக்கிக்கிடலாம்னு சொல்லுச்சு.

என்னது வேட்டை நாய்கள் இந்த பக்கம் வருதான்னு பயந்த நரி அங்க இருந்து ஓட ஆரம்பிச்சுச்சு.

அப்ப அந்த சேவல் கேட்டுச்சு. ஏன் நல்ல சேதி தெரிஞ்ச நீங்க நண்பர்களை பார்த்து ஓடுறீங்கன்னு கேட்டுச்சு.

அதுக்கு தன்னோட தந்திரத்தில தோத்த நரி சொல்லுச்சு, அதாவது அந்த வேட்டை நாய்களுக்கு நல்ல சேதி தெரியாம கூட இருக்கலாம், அதுங்க என்ன பார்த்ததும் முதல்ல என்ன பிடிச்சி கொன்றுடுங்க. அதனால தான் ஓடுறேனு சொல்லுச்சு.

நரியோட தந்திரத்தை தன்னோட தந்திரத்தால ஜெயிச்ச சேவல் அந்த மரத்து மேலயே படுத்து தூங்க ஆரம்பிச்சுச்சு.

நீதி : தந்திரக்காரன் எளிதில் ஏமாற்றப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ மற்றவர்களுக்காக வழிவிட்டுக் கொடு
இறைவன் நிச்சயம் உனக்கு வழி விடுவான்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணத்தில் சிறுவர் வைத்தியசாலையை நயினை அம்மன் ஆலயம் நிர்மாணிக்க வேண்டும்

அன்பர் பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே என்பார் தாயுமான சுவாமிகள்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது சைவ மெய்யன்பர்களின் முடிவு.

ஆக மக்களுக்குச் சேவையாற்றுவது தான், இறைபணி என்பதில் சைவ சமயம் ஐயம் தெளிவுற எடுத்துக்கூறியுள்ளது.

அதேவேளை குறிப்பிட்ட சைவாலயங்கள் சமூகப் பணியில் தம்மை ஈடுபடுத்தி வருவதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இருந்தும் அறப்பணியில் இன்னும் சைவாலயங்கள் ஈடுபட வேண்டும் என்பது மக்களின் விருப்பம்.

அந்த வகையில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் நம் ஈழத் திருநாட்டில் இன, மத பேதமின்றி அனைத்து மக்களும் வழிபடுகின்ற ஆலயம்.

தவிர, நயினை நாகபூசணித் தாயின் அருளாட்சி இவ்வையகம் முழுமையும் பரவிக் கிடக்கிறது.

ஆம், வெளிநாடுகளில் வாழ்கின்ற நம்மவர்கள் நயினை நாக பரமேஸ்வரித் தாயை நினைந்தபடி வாழ்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் அவர்களின் மனம் நயினாதீவுத் தாயை நினையாத நாளில்லை.

உண்மை. எங்கள் புலம்பெயர் தமிழ் உறவுகள் தாயகம் வருவதாயின், அவர்களின் நிகழ்ச்சி நிரலில் நயினாதீவு நாகபூசணி அம்மனிடம் சென்று தரிசிப்பது என்பது முதலிடத்தைப் பிடித்துக் கொள்ளும்.

இவ்வாறாக அகிலம் முழுவதிலும் தன் அடியார்களை ஆட்கொண்டிருக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் எங்கள் மண்ணில் அறப்பணிகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

இங்கு நாம் அறப்பணி என்று கூறும்போது; மேற்படி ஆலயம் செய்கின்ற அறப்பணிகளைப் பரிபாலன சபை நிச்சயம் பட்டியல்படுத்தும்.

ஆனால் நாம் கூறுவது எங்கள் மண்ணில் சிறுவர்களுக்கான வைத்தியசாலையொன்றை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் அமைத்துத் தரவேண்டும் என்பதுதான்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்குரிய சிறுவர் வைத்தியசாலை இணுவிலில் அமைப்பதாக இருந்தபோதிலும் அந்தப் பணி இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை அல்லது வேறு விடயங்கள் காரணமாக இருக்கலாம்.

ஆனால் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் சிறுவர்களுக்கான வைத்தியசாலை தனியான இடத்தில், அனைத்து வசதிகளும் கொண்டதாக அமையப்பட வேண்டும்.

எனவே இந்த உயிர்காக்கும் சிறுவர் வைத்தியசாலையை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் அமைத்துக் கொடுப்பது சாலப் பொருத்துடையது.

இந்தப் பணியை பிரஸ்தாப ஆலயம் முன்னெடுக்கும்போது, அதற்கான நிதிப் பங்களிப்பு உலகம் முழுவதிலிருந்தும் தாராளமாக வந்து குவியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நயினைத் தாயின் அருளால் சிறுவர் வைத்தியசாலை நிர்மாணம் விரைவாகவும் அற்புதமாகவும் அமையப்பெறும். ஆகையால், இப்பெரும் அறப்பணியை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் செய்தருள வேண்டும்.

# குறுகிய கால கடன்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயக் கொள்கை சபை நேற்று முன்தினம் கூடிய போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால், கடந்த வருடம் ஜனவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலம், சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வேகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-7)

# ஆசியாவில் அதிக மின்கட்டணம் செலுத்தும் நாடு இலங்கை

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

தெற்காசியாவிலேயே அதிக மின் கட்டணத்தைக் கொண்டுள்ள நாடாக இலங்கை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாக Verite Research நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளின் உள்நாட்டு மின்சாரக் கட்டணத்தை விட இலங்கையின் உள்நாட்டு மின்சாரக் கட்டணம் 2.5 முதல் 3 மடங்கு அதிகம் என பகுப்பாய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக குறித்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவில் பாகிஸ்தான் இரண்டாவது அதிக மின் கட்டணத்தைக் கொண்டுள்ளதாகவும் ஆனால் இலங்கையை விட கட்டணம் மிகக் குறைவு என்று குறித்த ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், பெப்ரவரி, ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் இலங்கை தனது மின்சாரக் கட்டணங்களை மூன்று முறை திருத்தியது. மின்சாரம் வழங்குவதற்கான முழு செலவையும் திரும்பப் பெறுவதே அதிகரிப்புக்குக் கூறப்பட்ட அடிப்படையாகும். (ம-7)

# அபிராமிபட்டர் விழா

சுழிபுரம் கம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அபிராமிபட்டர் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

மாலை 5.00 மணிக்கு ஸ்நபன்பிஷகமும் விசேடபூஜையும் தொடர்ந்து விஷேட வசந்த மண்டபபூஜையும் அதனைத் தொடர்ந்து தேவாரபாராயணம், அபிராமி அந்தாதி ஓதுதல் என்பன நிகழும்.

இரவு 7.30 மணிக்கு மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் விசேட சாத்துப்படியுடன் மங்கல வாத்திய சகிதம் அம்பாள் திருவீதியுலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (ம-7)

# ரூ 37 கோடி பெறுமதியான மாணிக்கக்கற்கள் மீட்பு

## தேரர் உட்பட இருவர் கைது

(கொழும்பு)

கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 37 கோடி ரூபா மதிப்புள்ள மாணிக்கக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய, இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படவிருந்த 2 நீல மாணிக்கக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் மதிப்பு 37 கோடி ரூபா என இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெலிவேரி பிரதேசத்தில் தேரர் உட்பட இருவர் கொஸ்லந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** விடத்தற்பளை பண்ணை எனும் இடத்திலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக் குளம், சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடு கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா, (மகாகச்சக்கொடிய) , நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்கடு, சலலிங்கம ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# பதில் பொறுப்பதிகாரி பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு - ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களின் உடலில் விஷம் பரவிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் அதிகாரிகளால் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு பொலிஸ் நிலையத்திற்கு வந்த ஒருவர் வழங்கிய பால் பக்கெட்டை பருகிய பின்னர் அவர்கள் சிறைக் கூடத்திற்குள் மயங்கி வீழ்ந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர்கள் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

விஷம் உடலில் பரவியமையினால், அவர்கள் இருவரும் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# வைத்தியரை கடத்திய ஆசிரியர் கைது

(கொழும்பு)

மிட்டியாகொட பிரதேசத்தில் வைத்தியர் ஒருவரை கடத்திச் சென்று 40 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் மிட்டியாகொட பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய நபர் என ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் கடத்தப்பட்டவர் பதுளை பிரதேசத்தில் உள்ள வைத்தியராவார்.

சந்தேக நபரான மேலதிக வகுப்பு ஆசிரியர் குறித்த வைத்தியரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மிட்டியாகொட பிரதேசத்திற்கு வரவழைத்துள்ளார். அங்கு அவரை பலாத்காரமாக காரில் ஏற்றிச்சென்று மிட்டியாகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் இரண்டு நாட்களாக தடுத்து வைத்துள்ளார்.

அத்தோடு, தான் இதுவரை மூவரை கொலை செய்துள்ளதாகவும் தான் கோரும் 40 இலட்சம் ரூபாய் பணத்தை உரிய கால அவகாசத்திற்குள் செலுத்தாவிடில் உங்களையும் கொலை செய்துவிடுவதாக வைத்தியரிடம் கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**ஒல்லாந்தர் தீவுகளுக்கு வைத்த பெயர்கள்**

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக்கேற்ப டச்சுமொழியில் பெயர் | வேறு டச்சுப் பெயர் |
|---|---|---|
| அனலைதீவு | Annelletivo | Rotterdam / Donneclara |
| நயினாதீவு | Naynativo | Haarlem |
| புங்குடுதீவு | Poengertivo | Middelburg |
| நெடுந்தீவு | Nedoentivo | Delft |
| காரைநகர் | Caretivoe | Amsterdam |
| ஊர்காவற்றுறை | Leijden | Kayts |
| எழுவைதீவு | Elloewativo | Woest Eijland |

Donneclara- போர்த்துக்கேயர் பெயர் Kayts- ஆங்கிலப்பெயர்

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக்கேற்ப டச்சு மொழியில் பெயர் |
|---|---|
| வேலணை | Welene |
| சரவணை | Charawane |
| நாரந்தனை | Narendane |
| கரம்பொன் | Caremben |
| மண்கும்பான் | Mangoepaen |
| அல்லைப்பிட்டி | Allapetti |
| மண்டைதீவு | Mandativeo |

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் உள்ள 33கோவிற்பற்றுக்களிலும்போர்த்துக்கேயர் கட்டிய கோயில்களை ஒல்லாந்த கட்டடக் கலை மரபில் திருத்தி அமைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க ஆலயங்களும் பாடசாலைகளும் பெருமளவில் காணப்பட்டதனால் அந்த அமைப் புக்களை அப்படியே புரட்டஸ்தாந்துக் கிறிஸ்த வர்களுக்கு மாற்றுவது இலகுவான காரியமாக இருந்தது. புரட்டஸ்தாந்து மதத்தை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடனிருந்த ஒல்லாந்தர், சைவ மத நடவடிக்கைகளுக்கு இறுக்கமான கட்டுப்பாட்டை விதிக்காமைக்கு காரணம் சுதேச மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாததேயாகும். ஒல்லாந்தர் தீவுகளுக்கு தமது நாட்டின் பிரதேசப் பெயர்களையும் இட்டு அவ்விடங்களை அப் பெயர்களால் அழைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### தீவுகளிலிருந்த கோவில் பற்றுக்கள்

இத்தீவுகள் 7 கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தன. அவையாவன: (1) காரைதீவு (காரை நகர்), (2) புங்குடுதீவு, (3) அனலைதீவு, (4) நயினாதீவு, (5)வேலணை, (6)அல்லைப்பிட்டி மற்றும் (7) ஊர் காவற்றுறை(டச்சு மொழியில் "Oeratoere"). இவைக் குள் பல கிராமங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### வலிகாமம் மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

வலிகாமம் மாகாணம் 14 கோவில் பற்றுக் களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன:

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் |
|---|---|
| (1) வட்டுக்கோட்டை | Battecotte |
| (2) சங்கானை | Changane |
| (3) பண்டத்தரிப்பு | Pandatripoe |
| (4)உடுவில் | Oedoewil |
| (5)மானிப்பாய் | Manipaey |
| (6)மல்லாகம் | Mallagem |
| (7)வண்ணார்பண்ணை | Wannaerponne |
| (8) தெல்லிப்பழை | Tellipalle |
| (9) மயிலிட்டி | Maylettie |
| (10) அச்சுவேலி | Atchoewely |
| (11) கோப்பாய் | Coopaey |
| (12)புத்தூர் | Poettoer |
| (13) நல்லூர் | Nalloer |
| (14) சுண்டிக்குளி | Choendikoeli |

பல கிராமங்கள் ஒவ்வொரு கோவில் பற்றுக் குள்ளும் உள்ளடங்கியிருந்தன. ஒல்லாந்தர் மொத்தமாக 68 கிராமங்களை இவ் 14 கோவில் பற்றுகளுக்குள் அடையாளப்படுத்தியிருந்தார்கள்.

### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

**(1)வட்டுக்கோட்டை கோவில் பற்று (3 கிராமங்கள்):-**
மேல் வட்டுக்கோட்டை, கீழ் வட்டுக்கோட்டை மற்றும் அராலி

**(2) சங்கானை கோவில் பற்று (4 கிராமங்கள்):-**
சங்கானை, மூளாய், தொல்புரம் மற்றும் சுழிபுரம்

**(3)பண்டத்தரிப்பு கோவில் பற்று:-**
சில்லாலை, மாதகல், பெரியவிளான், சிறுவிளான் மற்றும் சில கிராமங்கள்

**(4) உடுவில் கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
உடுவில், சங்குவேலி , சுன்னாகம், இணுவில் மற்றும் தாவடி

**(5) மானிப்பாய் கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி மற்றும் சண்டிலிப்பாய்

**(6)மல்லாகம் கோவில் பற்று:-**
மல்லாகம், அளவெட்டி, ஈவினை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் மற்றும் சில கிராமங்கள்

**(7) வண்ணார்பண்ணைகோவில் பற்று (1கிராமம்):-**
வண்ணார்பண்ணை

**(8)சுண்டிக்குளிகோவில் பற்று (6 கிராமங்கள்):-**
சுண்டிக்குளி, கரையூர், கொழும்புத்துறை, சிவியார்தெரு மற்றும் இரு கிராமங்கள்

**(9)தெல்லிப்பழை கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
தெல்லிப்பழை, மாவிட்டபுரம், பளை, வீமன்காமம் மற்றும் கட்டுவன்

**(10) மயிலிட்டிகோவில் பற்று (7 கிராமங்கள்):-**
மயிலிட்டி, வயாவிளான், பலாலி, வறுத்தலை விளான், தையிட்டி மற்றும் இரு கிராமங்கள்

**(11) அச்சுவேலிகோவில் பற்று (7 கிராமங்கள்):-**
நவக்கிரி, பத்தமேனி, கதிரிபாய், வள்ளாய், தம்பாளை மற்றும் இரு கிராமங்கள்.

**(12)கோப்பாய்கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
கோப்பாய், இருபாலை,உரும்பிராய், ஊரெழு, மற்றும் நீர்வேலி

**(13)புத்தூர் கோவில் பற்று (4 கிராமங்கள்):-**
புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு மற்றும் ஆவரங்கால்

**(14) நல்லூர் கோவில் பற்று (4 கிராமங்கள்):-**
நல்லூர், திருநெல்வேலி,கொக்குவில் மற்றும் கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமராட்சி மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

வடமராட்சி மாகாணம்3கோவில் பற்றுக் களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன:

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| (1)உடுப்பிட்டி | Ureputti |
| (2)பருத்தித்துறை | Paretitoere/ Punto Pedro |
| (3) கட்டவேலி | Kattewelie |

ஒல்லாந்தர் மொத்தமாக 9 கிராமங்களை இவ் 3 கோவில் பற்றுகளுக்குள் அடையாளப் படுத்தியிருந்தார்கள்.

### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

**(1)உடுப்பிட்டி கோவில் பற்று (2 கிராமங்கள்):-**
உடுப்பிட்டி மற்றும் கரணவாய்

**(2)பருத்தித்துறை கோவில் பற்று (3 கிராமங்கள்):-**
புலோலி, தும்பளை மற்றும் வறாத்துப்பளை

**(3)கட்டவேலி கோவில் பற்று (4 கிராமங்கள்):-**
கரவெட்டி, அல்வாய், துன்னாலை மற்றும் வல்லிபுரம்

### தென்மராட்சி மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

தென்மராட்சி மாகாணம்5கோவில் பற்றுக் களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன:

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| (1)நாவற்குழி | Nawakoellie |
| (2)சாவகச்சேரி | Chawagacheri |
| (3)வரணி | Waranie |
| (4)கச்சாய் | Chatchay |
| (5)எழுதுமட்டுவாழ் | Eloedomatoewael |

ஒல்லாந்தர் மொத்தமாக 26 கிராமங்களை இவ் 5 கோவில் பற்றுகளுக்குள் அடையாளப் படுத்தியிருந்தார்கள்.

### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

**(1)நாவற்குழி கோவில் பற்று (3 கிராமங்கள்):-**
நாவற்குழி, நுணாவில் மற்றும் கோவி லாக்கண்டி

**(2)சாவகச்சேரி கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
சாவகச்சேரி, மட்டுவில், சரசாலை, தனங் கிளப்பு மற்றும் மீசாலை

**(3)வரணி கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
வரணி, மந்துவில்,குடமியன், தாவளை இயற்றாலை மற்றும் வரணி இயற்றாலை

**(4)கச்சாய் கோவில் பற்று (8 கிராமங்கள்):-**
கச்சாய்,பாலாவி, கெற்பெலி, அல்லாரை, உசன்,கொடிகாமம், வெள்ளம்போக்கடி மற்றும் ஒரு கிராமம்.

**(5)எழுதுமட்டுவாழ்கோவில் பற்று (5 கிராமங்கள்):-**
எழுதுமட்டுவாழ், நாகர்கோவில், மிருசுவில், அம்பன் மற்றும் கரம்பகம்,

(தொடரும்...)

## பொதுப் போக்கு...

றது.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் 18 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், பொதுப் போக்குவரத்துக்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை கையாள்வதற்காக பொலிஸாரினால் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் விசேட வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் என பல்வேறு பகுதிகளிலும் சிவில் உடையில் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பயங்கரவாத...

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற அறிவிப்பின்போதே இதனைச் சபைக்கு அறிவித்தார்.

2024 ஜனவரி 23ஆம் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்கள் மற்றும் 2024 ஜனவரி 24ஆம் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதினெட்டு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "பயங்கரவாத எதிர்ப்பு" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு மேலும் 6 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன, அவற்றின் பிரதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். (ம-7)

## வடக்கின்...

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

விடயங்களைக் கேட்டறிந்த நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், குடாநாட்டிற்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் எனக் கூறினார்.

அத்துடன் முதலீட்டு திட்டங்களை ஊக்குவித்து வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்பை வழங்கவும் தயார் என அவர் உறுதியளித்தார். (ம-7,33)

## பொருளாதார...

பெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி தமது உரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எந்தவிதக் கருத்தையும் முன்வைக்கவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்தினார். (ம-7)

## கொடுப்பனவு...

யர்கள் ஓய்வுபெற்று ஓராண்டுக்கு மேலாகியும், ஓய்வூதியத் திணைக்களம் அதைத் தயாரிப்பதில் காலதாமதம் செய்து வருவதாகவும், 2016க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட சிறப்புக் கொடுப்பனவும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, இந்த வருடத்திற்கான பெப்ரவரி மாத ஓய்வூதிய கொடுப்பனவு நேற்று வழங்கப்பட்ட போதிலும், இது வரையில் விசேட கொடுப்பனவு உள்ளடக்கப்படவில்லை எனவும் ஓய்வூதியதாரர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.(ம-7)

## முதியோர்...

ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக கொடுப்பனவு ரூபாய் 7,500 ஆகவும், 2,000 ரூபாயாக இருந்த முதியோர் கொடுப்பனவு 3,000 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது நிவாரணம் பெற்று வரும் குடும்பங்களில் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக கொடுப்பனவுகளை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் அடையாளம் காணப்பட்டு, அதன் பின்னர் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அவர்களுக்கும் இந்த அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும்.

இதற்கிடையில், மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைய திட்டமிடப்பட்ட அஸ்வெசும கொடுப்பனவுகளின் கீழ் ஆபத்தில் உள்ள மற்றும் இடைநிலை பிரிவின் கொடுப்பனவுகள் டிசம்பர் 31 வரை வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது இடைநிலைப் பிரிவினருக்கு 2500 ரூபாயும், பாதிப்புக்குள்ளான பிரிவினருக்கு 5000 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சாந்தனுக்கு...

அவருக்குரிய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறைக்குச் சாந்தனுடைய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சால் அறியத் தரப்பட்டுள்ளது.

இதன்படி, சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் வரும் நாட்களில் இந்திய அரசு தரப்பினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

## மக்...

கின்றன எனத் துறைமுகங்கள் விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்குச் சர்வதேசமும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வரும் நிலையில் சர்வதேச ரீதியில் எமது நாடு மீதான நம்பிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது சர்வதேசத்துடன் இணைந்து செயற்படாமல் எம் போன்ற நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது அசௌகரியமான விடயமாகும்.

நாட்டின் சுற்றுலாத்துறை தற்போது சிறந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது.

கடந்த மாதத்தில் மாத்திரம் இரண்டு இலட்சம் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். போராட்ட காலத்தில் 25 சுற்றுலாப் பயணிகள் கூட நாட்டுக்கு வராத நிலையில் தற்போது சுற்றுலாத்துறை சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சிறந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு முடிந்துள்ளது. அந்த வகையில் ஒரு டொலர் கூட கையிருப்பில் இல்லாத இந்த நாட்டில் தற்போது 4.4 பில்லியன் டொலர்கள் கையிருப்பில் காணப்படுகின்றன.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத் திட்டத்தின் பயனாகும், அத்துடன் இந்த வருடம் நிச்சயமாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அதனால் அதற்கு முகங்கொடுக்கத் தயாராகுங்கள். நாங்களும் தயாராகிறோம் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### லக்கி 7 VIP

திகதி 2024.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 0210
D 1 2 6 1 4 9 D

### தன நிதானய

திகதி 2024.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 1414
J 02 38 49 74 J
Double Chance 10311

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3626
சீட்டிழுப்பு திகதி 08.02.2024
R 02 14 24 47
R 69587

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2024.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 0693
கும்பம் 37 41 45 47 கும்பம்
08240 04

### மஹஜன சம்பத

திகதி 2024/02/08
சீட்டிழுப்பு இலக்கம் 5384
C 0 3 9 5 1 9

### மெகா பவர்

திகதி 08/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1732
G 18 22 52 55 66
38768

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப தின சம்பத

08.02.2024 வெற்றி வாரம் 092 வர்ணம் ஊதா
S 0 5 9 0 8 1
71517
28,571,164.00

### Super Ball

சீட்டிழுப்பு வாரம் 2358 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.08 தினம் வியாழக்கிழமை
18 49 51 63 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,432,685.60
58388

### சனிதா

திகதி 2024.02.08 வெற்றி வாரம் 4519
03 09 22 67 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,590,013.20
70533

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4070 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.08 தினம் வியாழக்கிழமை
29 31 39 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,192,043.20
595678

### கப்ருக

H 38 18 27 38 54
1534
08.02.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 503,456,146.20

### அட கோடிபதி

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2184
திகதி : 2024.02.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,599,663.20
08 11 41 73 M
842998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பு...

ஆகவே விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் தான் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் 11,16,19,20,27 உள்ளிட்ட சரத்துக்கள் உட்பட பெரும்பாலான சரத்துக்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும் அத்துடன் 16 மற்றும் 19 ஆவது சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் யோசனைகளை முன்வைத்துள்ளது.

சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைக்கும் யோசனைகளை முறையாகச் செயற்படுத்த வேண்டியது பாராளுமன்றத்தின் கடமையாகும். ஆனால் அரசியலமைப்புக்கும், உயர்நீதிமன்றத்துக்கும் அப்பாற்பட்ட வகையில் ஆளும் தரப்பினரது ஆதரவுடன் இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மீதான நம்பிக்கை மலினப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்புக்கு எதிரான செயற்பாட்டுக்குச் சபாநாயகர் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு ஒத்தாசை வழங்கியுள்ளார். சட்டமூலம் மீதான இறுதி விவாதத்தின் போது நாங்கள் வாக்கெடுப்பு கோரினோம். ஹெட்செட்டை காதில் அணிந்து கொண்டு எதிரணியினர் குறிப்பிடுவது கேட்காதது போல் இருக்கும் புதிய பழக்கத்தைச் சபாநாயகர் தற்போது கடைப்பிடிக்கிறார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. என்னைத் தொடர்புப்படுத்தாதீர்கள் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், சட்டமூலம் மீதான இறுதி விவாதம் இடம்பெற்ற போது நீங்கள் தான் சபைக்குத் தலைமை தாங்கினீர்கள், அரசியலமைப்பு மீறல் செயற்பாட்டுக்கு நீங்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆகவே உடனடியாக விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை ஏற்பாடு செய்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள் இந்த சட்டத்தில் பாரதூரமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றை திருத்தம் செய்யுங்கள் என்றார். (ம-7)

**நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-8259)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## இறுதி...

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு கோரப்பட்டது.

எனினும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் "இலங்கை இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை. இலங்கை அரசாங்கத்திடமே புலிகள் சரணடைந்தார்கள்." என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மறுப்புக்கு எதிராக தகவலறியும் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு மூன்று வருடங்களுக்கு பின்னர் கடந்த 2022 ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த விசாரணைகளின்போது சட்டத்தரணிகளான சுவஸ்ரிக்கா அருலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்த இராணுவத்தின் தீர்மானத்துக்கு அனுதியளிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டு நவம்பர் 08ஆம் திகதி தகவலறியும் ஆணைக்குழு தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆணைக்குழு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் சார்பில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என்.சமரகோன் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மனுவை பரிசீலனை செய்திருந்த நீதியரசர் டி.என்.சமரகோன் மனுதாரர் சார்பில் ஆரம்பகட்ட பரிசீலனைகள் அவசியமில்லை எனவும் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இலங்கை இராணுவம் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் அறிவித்தல் விடுத்தார். (ம-7)

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஆரம்பம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஆரம்பித்துள்ளமை அவர்களது செயற்பாடுகளில் இருந்து தெரியவருவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது போராட்டத்திற்கு அடித்தார்கள், கண்ணீர் புகைகுண்டுகளால் தாக்கினார்கள் எனத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதியின் உரையின் போது எழுந்து சென்றார்கள்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியில் பிளவு ஏற்பட்டமையை தான் அவர்களின் செயற்பாட்டில் எமக்கு தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஏனெனில், எதிர்க்கட்சியை சேர்ந்த பலர் சபையில் அமர்ந்து கொண்டுதான் இருந்தார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளால் மக்களை ஏமாற்ற முடியாது.

அன்று நாட்டை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நாம் அழைப்பு விடுத்தோம்.

ஆனால், அவர் அதிலிருந்து தப்பித்து ஓடினார். இவருக்கு பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டமொன்று கிடையாது" என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் குறிப்பிட்டார். (ம-7)

**DCM - யாழ் நகர்**
(யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
**A/L கலை, வர்த்தகம்**
**புதிய பிரிவு - 2025**
**சனி - 8.00 மணி 10.02.2024**
- நிர்வாகம் -
(C-8309)

**தென்னிந்திய யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

ஆரம்பம் : 28.03.2024 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 16

**தரிசிக்கும் இடங்கள்** : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம் பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர், சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமாரி, சுசீந்திரம், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சாமதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை** : இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர் 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வருவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

**மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத் தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)**

**"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"** (18936)

தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
077 768 0102, 077 736 2154

**துரித பொதிகள் சேவை**



- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

**திருமுருகன் பொதிகள் சேவை**
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18785)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas- All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8311)

**உடனடி வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ்வரும் பணியாட்கள் தேவை.

- முகாமையாளர் - ஆண்/பெண்
- கணக்குப் பதிவாளர் - ஆண்/பெண்

- பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 743 5265

கரடிப்போக்கு சந்தியிலிருந்து 10Km சுற்றளவில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். (C-8294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.